**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.53/2025 PW-15**

| Name | திரு.தயாளன் |
|---|---|
| Husband/Father Name | பக்தவாச்சலம் |
| Village /Area | BNகண்டிகை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 44 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 25.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் 4, 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த ஆகஸ்ட் 2024ம் ஆண்டு BNகண்டிகையிலிருந்து கிழவனம் கிராமத்துக்கு வந்து கொண்டிருந்த போது அவ்வழியிலிருந்த அர்கோணம் கிராமிய ஆய்வாளருக்கு வணக்கம் என்று கூறியவுடன் என்னை சிறிது நேரம் இரு என்று சொல்லிவிட்டு பெரியபாளையத்தம்மன் கோவிலுக்கு 100 அடி தூரம் நடந்து சென்று அங்கு 10 நிமிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி இடத்துக்கு விசாரணைக்கு வந்ததாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் சரவணனிடம் விசாரித்து பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அருகே செல்லாததால் போலீசார் எதிரிகளிடம் என்ன பேசினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து ஊர்காரர்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சரவணன், கீதா மற்றும் ஆகாஷ் ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள 2வது கையொப்பங்கள் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.18, அ.த.சா.ஆ.19 மற்றும் அ.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.21.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

08.09.2024ம் தேதி பகல் 13 மணிக்கு நானும் சந்திரசேகர் என்பவரும் பாராஞ்சி பேருந்து நிறுத்தம் இடத்திலிருந்த போது ராணிப்பேட்டை துணை கண்காளிப்பாளர் கிழவனம் சந்திரன் கொலை வழக்கு சம்மந்தமாக சரவணன், கீதா மற்றும் ஆகாஷ் ஆகியோரை கைது செய்து விசாரித்து கொண்டிருந்ததாகவும் அவர்கள் எந்த விதமான வற்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் சாட்சி சந்திரசேகர் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்களுடன் கிழவனம் கிராமத்துக்கு சென்று பகல் 16.45 மணிக்கு எதிரி சரவணன் என்பவர் சம்பவத்தின் போது அணிதிருந்த ரத்தக்கரை படிந்த டி–சர்ட்யை அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்தை அடையாளம் காட்டி எங்கள் முன்னிலையில் ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றயதாகவும் மேற்படி ஆவணங்களில் நானும் சந்திரசேகரும் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.25 19:30:23 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.